# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
### கத்தோலிக்கத்திருமறை

al Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vav

சுட்டெண் .................................................... **தரம்: 07** **நேரம் - 1.30 மணித்தியாலம்**

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. இறைவாக்கினர்களான நாத்தான் , எலியா போன்றவர்களின் பணிகள் பற்றிய விடயங்கள் அடங்கியுள்ள நூல்கள்
   1) இறைவாகிகினர்கள் நூல்கள்  2) நற்செய்தி நூல்கள்
   3) 1,2 சாமுவேல் , 1,2 அரசர்கள்  4) எசாயா, எரேமியா நூல்கள்

2. “அபிரகாம்”என்ற பெயரின் கருத்து
   1) உன்னதத் தந்தை  2) கடவுளின் மேய்ப்பர்
   3) மேன்மையான தந்தை  4) இனங்களின் தந்தை

3. இறைவாக்கினரான யோனாவின் வாழ்வினூடாக இறைவன் நமக்கு வெளிப்படுத்துவது
   1) இறைவனின் அழைப்பு கிடைக்கும்போது பொறுமையுடன் செவிமடுக்க வேண்டும்.
   2) நமது விருப்பப்படி இறைவாக்குரைக்க இறைவன் அனுமதிக்கின்றார்.
   3) இறைவன் தான் தெரிந்து கொண்டவர்களை எப்படியாயினும் தன் பணிக்குட்படுத்துவார்.
   4) பொருத்தமில்லாத இடங்களில் இறைபணியாற்றக்கூடாது.

4. ஊர் என்ற நகரில் பிறந்து, ஆரான் என்ற நகரில் வாழ்ந்து இறைவனின் அழைப்பைப் பெற்றவர்
   1) மோசே  2) யாக்கோபு  3) ஈசாக்கு  4) ஆபிரகாம்

5. இறைவாக்கினர் ஏசாயாவின் அழைப்பிலிருந்து நாம் பெறும் வழிகாட்டல்.
   1) தீமை செய்பவர்களை இறைவன் தண்டிப்பார்
   2) இறைவனின் அழைப்புக்கு உடனடியாக கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும்.
   3) தூய்மையான உதடுகளை உடையவர்கள் மட்டுமே இறைபணியாற்ற முடியும்
   4) நாம் செய்த பாவங்களுக்கு உரிய காலத்தில் தண்டனை கிடைக்கும்.

6. சாரிபாத் ஊரில் அப்பமும் எண்ணெய்யும் குறையாமல் புதுமையைச் செய்தவர்.
   1) எலியா  2) எரேமியா  3) நாத்தான்  4) எலிசா

7. எரேமியா என்ற பெயரின் கருத்து
   1) இறைவன் உயத்துகின்றார்  2) கடவுள் பலப்படுத்துகின்றார்
   3) ஆண்டவராகிய கடவுள்  4) ஆண்டவரின் கொடை

8. தனது திருமண வாழ்விற்கூடாக இறைவனின் செய்தியை வெளியிட்டவர்

1) யோனா 2) எரேமியா 3) ஓசேயா 4) ஆமோஸ்

9. இஸ்ராயேல் நாட்டில் பரவியிருந்த அநீதியான வாழ்வைக் குறித்து எச்சரித்த இறைவாக்கினர்

1) தானியேல் 2) ஆமோஸ் 3) எலியா 4) ஓசேயா

10. தற்கால சமூகத்தில் இறைவனின் குரலை எம்மத்தியில் கொண்டுவரும் முக்கிய ஊடகமாகத் திகழ்வது

1) திருக்கட்டளைகள் 2) சீனாய் உடன்படிக்கை

3) திருவிவிலியம் 4) மோசேயின் கட்டளைகள்

**02) இறைவாக்கினர்களான நாத்தான் , எலியா போன்றவர்களின் பணிகள் பற்றிய விடயங்கள் அடங்கியுள்ள கீழ் வரும் சொற்களைக் கொண்டு பொருத்தமான முறையில் இடைவெளி நிரப்புக**

(நினிவே , ஏசாயா , பிரதிபலனை ,கார்மேல் , தியாகம் , ஆசி, விண்மீன்களை, கடவுள், கானான் ,ஆராதனை)

11. இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த நாட்டிலும் ............................................................................ இல்லை

12. வானத்தை நிமிர்ந்து பார் முடியுமானால் ............................................................................ எண்ணிப்பார்

13. உன்னை நான் பெரிய இனமாக்குவேன் . உனக்கு............................................................................ வழங்குவேன்

14. ஆபிரகாம் இறை அழைப்பை ஏற்றுக்கொண்டு ............................................................................ நாட்டுக்குச் சென்றார்

15. ஒரே இறைவனை மட்டும் ............................................................................ செய்ய வேண்டும்

16. இறைவாக்கினர் யோனா ............................................................................ பட்டணத்தில் இறைவாக்குரைத்தார்

17. ............................................................................ என்ற பெயரின் கருத்து “இறைவன் மீட்கிறார்” எனபதாகும்

18. நாம் ஒருவருக்கு உதவி செய்யும்போது ............................................................................ எதிர்பார்க்கக்கூடாது

19. ............................................................................ மலையில் எலியா இறைவனுக்குப் பலி செலுத்தினார்

20. ஆபிரகாமின் அழைப்பில் ............................................................................ சவால் ஆகிய இரு பிரிவுகள் உள்ளன.

**(2 × 20 = 40 புள்ளிகள்)**

## பகுதி - II

- **முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கு அமைவாக சிறிய இறைவாக்கினர் என்ற பாட அலகிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   1) ஆமோஸ் இறைவாக்கினரின் தொழில்களையும் அவர் வெளிப்படுத்திய செய்தியையும் எழுதுக.
   2) இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த யோனாவுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை எழுதுக
   3) ஒசேயா, மக்களுக்கு கூறிய செய்தியைச் சுருக்கமாக எழுதுக.
   4) யோனாவின் அறிவுரையைக் கேட்ட நினிவே மக்கள் எவ்வாறு செயற்பட்டனர்.

2. 1) இறைவாக்கினர் எனப்படுபவர் யார்? என்பதையும் அவர்களின் பணிகளையும் எழுதுக.
   2) திருமுழுக்கின் மூலம் இறைவாக்குப் பணிக்காக அழைப்புப் பெற்ற உம்மால் ஆற்றக் கூடிய இறைவாக்குப் பணிகள் மூன்றை எழுதுக.

3. 1) கார் மேல் மலையில் நடந்த சம்பவத்தை சுருக்கமாக எழுதுக
   2) இச் சம்பவத்திலிருந்து நீர் பெற்றுக் கொள்ளும் வழிகாட்டல்கள் மூன்றை எழுதுக.

4. 1) பெரிய இறைவாக்கினர்களான எரேமியா, எசேக்கியேல் என்பவர்களின் பணிகள் பற்றி சுருக்கமாக எழுதுக.
   2) இறைவாக்கினர்களின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினைகள் 3 எழுதுக

5. 1) ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தபோது வழங்கிய வாக்குறுதிகளை எழுதுக
   2) ஆபிரகாமின் வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் மூன்று எழுதுக

6. 1) இறைவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொண்டதன் அடையாளமாகச் செய்யம்படி கூறியவற்றை எழுதுக.
   2) திருமுழுக்கின் வழியாக உடன்படிக்கை வாழ்வுக்குள் பிரவேசித்த நீர் உடன்படிக்கைக்கு ஏற்ப எவ்வாறு வாழ்வீர் என்பதற்கு 5 வரிகளில் எழுதுக

7. 1) ஏசாயா இறை அழைப்புப் பெற்ற போது கண்ட காட்சியைச் சுருக்கமாக எழுதுக.
   2) ஏசாயா தன் பாவ நிலையை உணர்ந்து கூறிய வார்த்தையையும் அதன் மூலம் அவர் தூய்மைப்படுத்தப்பட்ட நிகழ்வும் உமது இறை நம்பிக்கை வாழ்வுக்கு எவ்வகையில் ஊக்குவிப்பாக அமைகின்றது 5 வசனம் எழுதுக.